











www.facebook.com/proverbs.9.ten

nine10proverbs.blogspot.in



# ரசிகர் மன்றம்

"படி படி"ன்னு சொல்றப்போ "கடி கடி"ன்னு காதுல கேக்குது. உங்களுக்குப் பிடிச்சத நீங்க ஜாலியாச் செய்வீங்க. ஆனா மத்தவங்க - அதுவும் டீச்சர்ஸ், அப்பா, அம்மா மாதிரி பெரியவங்க, சொன்னா அது கடின்னு ஒரு கருத்து இருக்குது. அதனாலத்தான் புத்தகம்ன்னாலே தெறிச்சு ஓடுறீங்க. உண்மை தான். ஆனா என்ன பண்றது. பாட புத்தகத்தப் படிச்சுத் தானே ஆகணும். ஆனா புத்தகம் படிச்சதால உலகப்புகழ் பெற்ற ஒரு மனுஷனப்பத்தி இந்தக் குட்டியூண்டு புத்தகத்துல சொல்லப் போறேன்.

கொஞ்ச வருஷங்களுக்கு முன்னால பெங்களூருவுக்கு அஞ்சு உலகப் புகழ் பெற்ற



டாக்டர்கள் வந்திருந்தாங்க. தலைகள் ரெண்டும் ஒட்டிப் பிறந்த ஒரு இரட்டைக் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்றதப் பத்தி ஆராய்ச்சி செய்ய. அதுல ஒருத்தர் பேரு பென் கார்சன். அமெரிக்காவுல கருப்பர் இனத்தில பிறந்த அவரு உங்களப் போல ஸ்கூல்



ஸ்டுடண்ட்டா இருந்தப்போ நடந்தது தான் இந்தக் கதை.

பென்னோட அப்பா அவுங்க அம்மாவையும் அவன் அண்ணனையும் விட்டுட்டு ஓடிப் போயிட்டார். அம்மா மூணாங்கிளாஸ் பாஸா ஃபெயிலான்னு தெரியாது. ஆனா பசங்க பெரிய படிப்பு படிச்சு 'ஆளா'



வரணும்னு ஆசப்பட்டாங்க. பத்துப் பாத்திரம் தேய்ச்சு வீட்டு வேல செஞ்சு தான் அவுங்க பசங்களப் படிக்கவச்சாங்க. அந்த அம்மா படிக்காம இருந்தாலும் விவரமானவங்க (குறைஞ்ச ராங்க் வாங்கறவங்க அதிக அறிவோட இருக்கறது போல.)

பசங்களுக்கு அஞ்சு கண்டிஷன்ஸ் போட்டாங்க. பரவால்லியே எங்க வீட்டுல இருபத்து ஏழு போடறாங்களேன்னு சொல்றீங்களா? அந்த நாலு கேட்டீங்கன்னா டர்

ஆயிடுவீங்க. (இந்த புத்தகத்த உங்க வீட்டுல யார் கண்ணுலயும் காட்டவே மாட்டீங்க)

1. ஒரு நாளுக்கு அரை மணி நேரம் தான் டி.வி பாக்கலாம்.
2. தெருவுல பசங்களோட விளையாடப் போகக் கூடாது.
3. ஒரு வாரத்துக்கு ரெண்டு புத்தகம் படிக்கணும். (பாட புத்தகம் தவிர) அதை ஒரு பேப்பர்ல சுருக்கமா எழுதி அம்மாட்ட காட்டணும்.(அம்மா வாசிக்கமாட்டாங்க அப்படிங்கறது வேற விஷயம்.)
4. ஒவ்வொரு நாளும் வேத புத்தகத்துல நீதிமொழிகள் அப்படிங்கற புத்தகத்துல ஒரு அத்தியாயம் வாசிக்கணும்.

பசங்களுக்கு கடியா இருந்தாலும் அம்மா அவங்க மேல வச்சிருக்கற பாசம் அவங்களப் படிக்க வைக்கறதுக்கு படற கஷ்ட்டம் எல்லாம் அவங்களப் பல்லக் கடிச்சிட்டு சகிக்க வச்சுது. இதுல மூணாவது விஷயத்த மட்டும் அதிகமாச் சொல்லப் போறேன்.



பள்ளிக்கூடத்துல நூலகம்-னு ஒண்ணு இருக்குமே, அதான் லைப்ரரி - அங்கே போய் பென் வாரம் ரெண்டு புத்தகத்த எடுத்து கடமையேன்னு படிச்சு ஒரு பக்கம் ரிப்போர்ட்டும் எழுதி அம்மாட்ட குடுத்துட்டு இருந்தான். நாலாம் வகுப்புல புத்தகம் படிக்க ஆரம்பிச்ச பென் கார்சன், ஏழாம் வகுப்பு வர்றதுக்குள்ள பெரிய ஆளா ஆயிட்டான். வகுப்புல கடைசி மார்க் வாங்கின பென் இப்போ 'ஃபர்ஸ்ட் ராங்க்.'



கதைகளப் படிச்சு "நானும் ஒரு மாலுமி, கண்டுபிடிப்பாளன், டாக்டர், சயன்டிஸ்ட்" அப்படின்னு கனவு கண்டுகிட்டு இருந்தான்.

பெரிய மனுஷங்க வாழ்க்கை வரலாறுகள வாசிச்சு அவங்களோட நல்ல பழக்கங்களையும் வாழ்க்கையையும் காப்பி அடிச்சான். பசங்க கணக்குல சந்தேகம் வந்தாலும், ஸ்பெல்லிங்-ல டவுட் வந்தாலும் பென் கிட்ட ஓடி வர ஆரம்பிச்சாங்க.

ஒரு நாள் வகுப்புல பாறைகளப் பத்தி பாடம் நடக்கறப்போ டீச்சர் ஒரு கேள்வி கேட்க



அதப்பத்தி லைப்ரரில எடுத்துப் படிச்ச ஒரு புத்தகத்துல பதில் இருக்கறது ஞாபகம் வந்தது பென்னுக்கு. விடுவானா? "சார்" அப்படின்னுட்டு கையத் தூக்குனான். "பென் உடுற ரவுசப் பாரு, இப்போ சார் கிட்ட டோஸ் வாங்கப் போறான்" அப்படின்னு பசங்க எதிர்பார்த்துட்டு இருந்தாங்க.

"யெஸ்"னு சார் சொல்லவும் பந்தாவா பதில் சொன்னாரு நம்மாளு. பின் பெஞ்சுல இருக்கற பென் திடீர்னு இப்படி பதில் சொன்னது எல்லாருக்குமே ஆச்சரியமா இருந்தது. 'ஆசிரியர் பாராட்டு' அப்படிங்கறது அவனுக்கு பெரிய பரிசு மாதிரி இருந்தது. பென் விடுவானா? அடுத்த நாள்ல இருந்து வகுப்புல நடக்கற நடக்கப் போற எல்லாப் பாடங்களையும் லைப்ரரில



புத்தகங்கள்ல இருந்து படிச்சான். அடுத்தடுத்து பரிட்சைகள்ல மார்க் கூடி, அவனும் முன் பெஞ்சுக்கு வந்து, அரசாங்க ஸ்காலர்ஷிப் கிடைச்சு, மெடிக்கல் சீட் கிடைச்சு, சின்ன பிள்ளைங்களுக்கு வைத்தியம், அப்புறமா சின்னப் பிள்ளைங்களுக்கு மூளை நரம்பு வைத்தியம் அப்படிங்கற கஷ்ட்டமான படிப்பு எல்லாத்தையும் முடிச்சு இப்போ உலகதுலேயே ஃபேமஸ் டாக்டரா இருக்காரு.

அவரு படிச்ச ஸ்கூலுக்கு ஒரு ஃபங்ஷனுக்காக போனப்போ 'பென் கார்சன் ரசிகர் மன்றம்' ஒண்ணு துவங்கிட்டாங்க அந்த ஸ்கூல் பசங்க. (பென் கார்சன் ஒரு சினிமால கூட நடிக்கல. ஒண்ணு ரெண்டு புத்தகங்கள் தான் எழுதியிருக்காரு). அந்த நாலு கண்டிஷன்களையும் நாங்களும் கடைப்பிடிப்போம் அப்படின்னு ஸ்டூடண்ட்ஸ் எல்லாரும் உறுதி மொழி எடுத்தாங்களாம். அப்புறமா அந்த ரசிகர் மன்றம் அமெரிக்கா முழுசுலயும் பரவிடுச்சு. இப்போ அவரு சம்பாதிச்ச பணத்துல படிக்கக் கஷ்ட்டப்படறவங்களுக்கு குடுத்து உதவுறாரு பென்.

நீங்க ரசிகர் மன்றமெல்லாம் ஆரம்பிக்க வேண்டாம் அந்த நாலாவது விஷயத்த மட்டும் கொஞ்சமா படிப்படியா செஞ்சீங்கன்னா அதிகம் முன்னேறலாம். சின்னதா கருத்து சொல்லப் போறேன். பிடிச்சா படியுங்க. படிச்சா பிடிக்கும் அப்புறம் திடீர்னு உங்க படம் பேப்பர்ல 'சாதனையாளர்' அப்படின்னு வந்தா எனக்கு ஆச்சரியமா இருக்காது.

1. உங்க ஸ்கூல் லைப்ரரி இருக்கற திசையைத் தெரிஞ்சு வச்சுக்கோங்க.
2. உங்களுக்குப் பிடித்தமான புத்தகங்களை மட்டும் முதலில் வாசிக்கத் துவங்குங்க.
3. நீங்க ஏற்கனவே அதிகம் வாசிக்கிறவரா இருந்தா கொஞ்சம் கஷ்டமான புத்தகங்களையும் படிக்க முயற்சி செய்து முழுப் புத்தகம் பற்றி ஒரு பக்கக் குறிப்பு எழுதிப் பழகுங்கள்.



4. விடுமுறை நாட்களில் பொழுது போக்குக்கு புத்தகங்கள் பக்கம் திரும்புங்கள்.
5. உங்களுக்கென்று ஒரு சிறிய அலமாரியில் குட்டி லைப்ரரி துவங்குங்கள்.
6. நல்ல புத்தகங்களை பழைய புத்தகக் கடைகளில் தேடிப் பிடித்து வாங்கிச் சேருங்கள்.
7. பிறந்த நாள் போன்ற சந்தர்ப்பங்களில் பரிசாக புத்தகங்களைச் சேருங்கள்.
8. உங்கள் மதத்தின் ஆன்மீகத் தலைவர்களின் அறிவுரைகளை தினசரி சிறிது சிறிதாக வாசியுங்கள்.
9. மத பேதமில்லாத 'நீதிமொழிகள்' என்ற சிறிய புத்தகத்தைப் பெற எங்களுக்கு எழுதுங்கள்.
10. உங்க வீட்டு பெரியவங்க உதவியோட பின் அட்டையில இருக்கற ஃபேஸ்புக், ப்ளாக் முகவரியில எங்க கூட தொடர்பு கொள்ளலாம். புதுக்கதைகள் படிக்கலாம்.